November 2019

# Coastal Watch

## கடலோரப் பார்வை



## Coastal Livelihood Matters

Coastal Watch
Monthly Coastal update from ICT
Vol. I Issue 5 November 2019

DHAN Foundation
1A, Vaidyanathapuram East
Kennet Cross Road
Madurai 625 016. Tamil Nadu, INDIA
Tel.: +91 452 2302500; Fax: 2602247
Email: dhanfoundation@dhan.org

Welcome to Coastal Watch!

Every Month, Coastal watch carries the stories of coastal life styles. Coastal community shares their own life experiences. It is released as part of the DHAN Foundation - Earth Journalism Network Project- Internews project titled “Voice of Vulnerable”. This is the fifth issue of the magazine “Coastal Watch”.

The articles in this magazine are not written by journalist or expert in the media field. The articles are written by community journalism volunteers trained by DHAN Foundation to write articles and promote community journalism in the coastal area.

This issue carries about seven articles. The articles in this issue talks about the various livelihoods experience of the coastal community especially the poor like brick making, inland fish farming, deep sea fishing, salt pan workers and agriculture. This issue also carries articles on Pongal festival and an article on villagers experience in getting an travelling in the local bus.

Thanks in advance for your support!

Keep Read and Reflect….

Regards

Editorial Team

Coastal Watch

## உள்ளடக்கம்

1. செங்கல் சோலை (சூளை)… 1
2. கடலுக்கு இணையான அலம்… 4
3. கோடியக்கரைக்கு பறவைகள் மட்டுமல்ல மீனவர்களும் இடம்பெயருகிறார்கள்… 6
4. விவசாயத்துவம்… 9
5. உப்பளம் 10
6. பேருந்து வழித்தட எண் 353 திருவாரூர் - கோட்டூர்… 12
7. கன்னிப் பொங்கலும் கொப்புராட்டியும்… 14

# செங்கல் சோலை (சூளை)...

புகழேந்தி *

நீரின்றி அமையாது உலகு எனின்
செங்கலின்றி அமையாது வீடு.

அனல் பறக்கும் சூளை இங்கே சோலையாக தெரிகிறது. ஆம் செங்கல் சூளையை வாழ்வாதாரமாக கொண்ட ஒரு கடற்புற குடும்பம், அதனை எப்படி செங்கல் சோலையாக பார்க்கிறது என்பதை இங்கே பார்க்கலாம்.

இந்த பூமியில் வாழக்கூடிய அனைவருமே அன்றாட வாழ்க்கையில் தினமும் ஏதேனும் வேலைகளுக்கு செல்ல வேண்டியது அவசியமான ஒன்றாகும். அது போல நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள தாமரைப்புலம் என்ற கிராமத்தில் வசித்து வருகின்ற புகழேந்தி என்னும் நான் என்னுடைய அப்பா திரு. வேலாயுதம் அவர்களின் வேலையை பற்றி இக்கட்டுரையில் கூற விரும்புகிறேன்.

கடந்த 30 வருடங்களாக என் தந்தை இந்த செங்கல் அறுப்பு தொழிலை செய்து கொண்டு வருகிறார். இவரைப் போலவே எங்கள் ஊரின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சுமார் 500 குடும்பங்களை சேர்ந்த ஆண்களும் பெண்களும் 30 செங்கல் சோலைகளில் இந்த தொழிலை செய்து தங்கள் குடும்பத்தை நடத்தி வருகின்றனர்.

நாம் எல்லோருமே வசதியான வீட்டில் பிறக்கவில்லை. ஒரு சிலர் வசதியான வீட்டிலும், ஒரு சிலர் மிகவும் ஏழ்மையான வீட்டிலும் தான் பிறக்கிறோம். ஏழ்மை வீடு என்றால் கூரை வீடாக தான் இருக்கும். தற்போது ஏற்பட்ட கஜா புயல் காரணமாக எங்கள் நாகை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான கூரை வீடுகள், மரங்கள் மற்றும் விலங்குகள் பாதிக்கப்பட்டன. அந்த நேரத்தில் கூரை வீடுகளில் வசித்து வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் படுகாயம் அடைந்தனர். ஆனால் செங்கல் மூலம் கட்டப்பட்ட கான்கிரீட் வீடுகளில் வசித்து வந்தவர்கள் பாதுகாப்பான முறையில் இருந்தனர். ‘‘வீடு கட்ட செங்கலை தரும் எங்களைப் போன்ற உழைப்பாளிகள் இன்றும்கூட கூரை வீட்டில் தான் வசித்து வருகிறோம்.’’



* புகழேந்தி, தாமரைப்புலம்

செங்கல் செய்யும் தொழிலை பிரதானமாக கொண்டு பிழைத்து வருகின்ற மக்கள் தங்களுடைய குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்ச்சிகள், தங்கள் குழந்தைகளின் கல்வி செலவு மற்றும் மாதாந்திர வீட்டு செலவுகள் என அனைத்திற்குமே இதில் வருகின்ற வருமானத்தை நம்பியே இருக்கின்றனர்.

இந்த பூமியில் வாழக்கூடிய ஒவ்வொரு உயிரினங்களுக்கும் நீர் இன்றியமையாத ஒன்று. அதுபோலவே ஒரு வீட்டினை உருவாக்க ஒவ்வொரு செங்கல்லும் முக்கியமான ஒன்றாகும். இந்த செங்கல் தொழிலை தொடர்ந்து செய்வதன் மூலம் அதிக லாபம் அடைவதோடு மக்களின் வாழ்வாதாரமும் மேம்படுகிறது.

எங்கள் ஊரில் வீட்டிற்கு அருகாமையில் குளங்களை வெட்டியும், ஊர் வயல்களில் களிமண் எடுத்தும், அதனை அறுத்து, பிறகு அந்த அறுத்த களிமண் துண்டுகளை எடுத்து விறகுகளை கொண்டு சூடேற்றும் போது அது செங்கலாக மாறுகிறது. களி மண்ணிலிருந்து செங்கல் செய்யப்படுகிறது என்று சொல்வதற்கு மிகவும் எளிமையாக இருந்தாலும் ஒரு செங்கல் உருவாகுவதற்கு எடுத்துக்க கூடிய நேரமும் செயல்பாடுகளும் மிக அதிகம்.

குளங்களிலும் வயல்வெளிகளிலும் இருந்து எடுக்கக்கூடிய களிமண்ணை நன்கு உளற வைக்க வேண்டும், பிறகு போதிய தண்ணீர் மற்றும் இதர மண் கலவைகளை சேர்க்க வேண்டும். இதைத்தொடர்ந்து களிமண் கட்டிகளை எடுத்து நன்கு சீவி பிசிறுகளை எடுக்க வேண்டும். பின் கட்டிகளை நன்கு சூரிய ஒளியில் காய வைத்து கொட்டகைக்கு எடுத்து செல்ல வேண்டும். அதன் பின்னர் விறகுகளை மூன்று அடுக்குகளாக அடுக்கி சுமார் 10 மணி நேரம் எரிக்க வேண்டும். இவ்வாறு சுட்ட செங்கலை அதன் அனல் போகும் வரை 6 முதல் 8 நாட்கள் வரை வைத்திருக்க வேண்டும்.

சொந்த வயல்களிலும் பொது குளங்களிலும் 2 முதல் 3 அடி வரை களிமண் எடுக்கலாம். 3 அடிக்கு கீழ் இருக்கும் அனைத்துமே அரசாங்க சொத்து. நாங்கள் எங்கள் சொந்த வயலிலேயே களிமன் எடுத்துக் கொள்கிறோம். இவ்வாறு களிமண் எடுத்து செங்கல் தயார் செய்யும் அனைவருமே ஒரு வருடத்திற்கு 30 ஆயிரம் ரூபாய் அரசாங்கத்திற்கு உரிமம் பெற செலுத்த வேண்டும்.

பெரும்பாலும் செங்கல் தயாரிப்பதற்கு களிமண் உகந்த மண் ஆகும். களிமண்ணின் தன்மைக்கு ஏற்ப தண்ணீர் மற்றும் பிற மண் கலவைகளை சேர்க்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் செங்கல் வெடிக்க நேரிடும், அனுபவம் தான் இதைக் கற்றுத் தரும். செங்கல்லுக்கு எடுக்கும் களிமண் கலவையில் உப்பு இருக்கக் கூடாது மாறாக மண் கட்டிகள் இருக்க வேண்டும். ஏனெனில் உப்பு அதிகமாக இருக்கும் களிமண் கலவையைத் தண்ணீரில் போட்டால் கரைந்துவிடும், ஆனால் மண் கட்டிகள் தண்ணீரில் போடும்போது உறுதியாகிவிடும். இவற்றை அனுபவம் மிக்க தொழிலாளர்கள் மாதிரிகளை வாயில் வைத்து பார்த்துக் கண்டுபிடித்து விடுவார்கள். பொதுவாகவே நாள் பட்ட செங்கற்களையே பொது மக்கள் வாங்க விரும்புகின்றனர். அவை நன்கு தண்ணீரில் ஊறி உறுதியாக இருக்கும். செங்கல் தொழிலை குடும்பத் தொழிலாக செய்யும் கணவன் மனைவி இருவராக இணைந்து வேலை செய்தால், ஒரு நாளில் 1,000 முதல் 1,300 கற்களை நன்கு அறுத்து, ஒரு செங்கல்லுக்கு ஒரு ரூபாய் வீதம் ஒரு நாளைக்கு ரூ. 1,000 முதல் ரூ. 1,300 வரை வருமானம் ஈட்டலாம். ஆனால் இவ்வாறு தெளிவாக செங்கலை அறுப்பதற்கும் பொறுமை மற்றும் அறுக்கும் திறன் தேவைப்படும்.

செங்கல் தொழில் செய்யும் குடும்பத்தில் இருக்கும் அடுத்த தலைமுறையினர் இந்த தொழிலுக்கு வருவதில்லை. இதனால் இந்தத் தொழில் தற்போது விவசாயம் மற்றும் கைத்தறி நெசவு போல் நலிவடைந்து வருகிறது. மேலும் சமூகத்திலும் இந்த தொழில் செய்வோருக்கு அந்தஸ்து குறைவாகவே இருக்கிறது. மழைக்காலங்களில் தங்கள் வேலைகளை சிறப்பாக செய்ய முடியாது. மேலும்



இதர காலங்களில் சூளைகளில் செங்கல் எரிப்பதற்கு விறகு கட்டைகள் அதிக அளவில் தேவைப்படும். இதர தொழில்கள் போலவே இந்த செங்கல் தொழில்களிலும் உடல்வலி ஒரு பிரச்சனையாகவே இருக்கிறது. ஒரு செங்கல் சூலை அமைக்க சுமார் ஒன்றரை முதல் இரண்டு லட்சம் ரூபாய் வரை செலவாகும்.

இந்த ஆண்டு செங்கல் விற்பனையில் ஒரு கல்லின் விலை ரூ. 6 இருக்கிறது. நாளுக்கு நாள் செங்கலுக்கான விலை ஏறுமுகமாகவே இருக்கிறது. பல மக்கள் வெளிநாடுகளுக்கு சென்று தமது சொந்தங்களை விட்டு அடுத்தவரிடம் அடிமையாய் இருந்து வேலை பார்ப்பதைவிட, நம்மூரில் கிடைக்கக்கூடிய வளங்களான நல்ல களிமண் மற்றும் தண்ணீரை பயன்படுத்தி இந்த தொழில் செய்வதன் மூலம் அதிக வருமானம் ஈட்ட முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் என்னுடைய குடும்பம் ஏழ்மை நிலையில் இருந்த போதும் மேலாண்மை பட்டப்படிப்பை முடித்தேன். தற்போது என்னுடைய அப்பாவோடு இந்த தொழிலை சேர்ந்து செய்வதன் மூலம் அதிக வருமானம் வருகின்றது. மேலும் இந்தத் தொழிலானது எங்கள் வாழ்வில் முன்னேற்றத்தை அடைய சிறப்பாக அமையும் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

ஒவ்வொரு ஊரும் வளர்ச்சி பாதைக்கு சென்று கொண்டிருக்கின்றது. வீடுகள் மற்றும் வணிக வளாகங்கள் போன்றவை அதிகமாக உருவாகிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான கட்டிடங்களை கட்டுவதற்கு செங்கல் அத்தியாவசியமான ஒன்றாக இருப்பதால் இந்தத் தொழில் வரும் காலங்களில் சிறப்பாக அமையும்.

நீரின்றி அமையாது உலகு எனின்
செங்கலின்றி அமையாது வீடு

என்று இந்த செங்கல் தொழிலை பிரதானமாக கொண்டிருக்கும் மக்களுக்கு நான் இத்திருக்குறளை சமர்ப்பிக்கிறேன்.

# கடலுக்கு இணையான அலம்

மூர்த்தி *

எங்கள் கிராமம் வேட்டைக்காரனிருப்பு, நாகப்பட்டினம் மாவட்டம் விழுந்தமாவடி அருகே அமையப் பெற்றிருக்கிறது. எங்கள் கிராமத்தில் கடைத்தெருவுக்கு மேற்கு திசையில் சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் ஒரு அலம் அமைந்துள்ளது. இது எங்களுக்கு இயற்கை தந்த பரிசாக கருதுகிறோம். எங்களது அலத்தை நாங்கள் ஒருபோதும் அலமாக பார்த்தது இல்லை, மாறாக நாங்கள் ஓர் சிறு கடலாக தான் பார்க்கிறோம். மழைக் காலங்களான நவம்பர் முதல் மார்ச் மாதம் வரை உள்ள ஐந்து மாதங்களிலும் அது ஒரு கடல் போலவே எங்களுக்கு காட்சியளிக்கும். இது எங்கள் கண்களுக்கு மட்டுமல்ல நமது தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சருமான டாக்டர் எம்ஜிஆர் அவர்களுக்கும் அவ்வாறே தெரிந்தது. ஆம், ஒரு சமயம் எம்ஜிஆர் அவர்கள் பதவியில் இருந்தபோது எங்கள் ஊரின் வழியே செல்ல நேர்ந்தது அப்போது காரில் சென்று கொண்டிருந்த அவர் எங்கள் அலத்தை பார்த்து இது ஒரு குட்டி கடல் போல் காட்சி அளிக்கிறது என்று கூறியுள்ளார் எங்களுக்கு அலம் தான் அவ்வப்போது வருமானத்தை ஈட்டித் தருகிறது.

மழைக்காலங்களில் தண்ணீரை பெறுகின்ற அலம் காலை வேளையில் தண்ணீரை கடலுக்கு உள்ளேயும், மாலை வேளையில் கடல் தண்ணீர் அலத்திற்கு உள்ளேயும் மாறி மாறி சென்று கொண்டிருக்கும். இவ்வாறு அலத்தில் இருக்கும் உப்புத் தண்ணீரை இறால் பண்ணைக்கு வடிகட்டி பயன்படுத்துவர். இவ்வாறு வடிகட்டி பயன்படுத்துவதால் கடல் மீன்களும் வேறு உயிரினங்களும் இறால் பண்ணைக்கு வந்து சேரா வண்ணம் இருக்கும். கடல் வாழ் உயிரினங்கள் இறால் பண்ணையில் இருந்தால் இறால்களை தின்று விடும் இதனால் இறால் வளர்ப்போர் மிகுந்த சிரமப்படுவர்.

இவ்வாறு இருக்கும் எங்கள் ஊர் அலத்தில் பல்வேறு வகையான இறால் வகைகளும், மீன் வகைகளும், நண்டு வகைகளும், நத்தை வகைகளும் வாழ்ந்து வருகின்றன. இறால் வகைகளை பொருத்தவரையில் வெள்ளை இறால் எனப்படும் வனாமி இறால், கருப்பு இறால் எனப்படும் டைகர் இறால் சாய இறால் மற்றும் முட்டை இறால் ஆகிய வகைகள் எங்கள் அலத்தில் காணப்படுகின்றன. மேலும் மடவாய் மீன், கெண்டை மீன், கெளுத்தி மீன், ஜிலேபி மீன், புளிச்ச மீன், டேங்க் கிளீனர் மீன் மற்றும் சென்னா மீன் போன்ற மீன் வகைகளும் மிகுதியாக இருக்கின்றன. இதில் சென்னா வகை மீன்கள் நன்கு மரம் ஏறத் திறன் கொண்டது. இவ்வகை மீன் மழைக்காலங்களில் அலத்தின் நடுவே இருக்கின்ற மரங்களில் வடியும் மழை நீரைக் கொண்டு அம்மரங்கள் மீது இயன்ற அளவு ஏறுகின்றன. தில்லை நண்டு மற்றும் பச்சை மற்றும் சிவப்பு கால் நண்டு ஆகிய 2 நண்டு வகைகள் மட்டுமே எங்கள் ஊர் அலத்தில் காணப்படுகின்றன. அதேபோல் நத்தை வகைகளுள் ஆப்பிள் நத்தை மட்டுமே தென்படுகின்றது, இந்த நத்தை வகைகள் எங்கள் பகுதிகளில் சமையலுக்கு பெருவாரியாக பயன்படுத்தப்படுகிறது.

மார்கழி மற்றும் தை மாதங்களில் நாங்கள் எங்கள் குடும்பத்தினரோடு மீன் இறால் மற்றும் நண்டு கடைபிடிக்க அலத்திற்கு செல்வோம். அக்காலங்களில் நினைக்கும்போது இப்போதும் கூட மகிழ்ச்சியாக இருக்கிறது. காற்று வீசும்போது ஆழத்தில் ஏற்படும் அலைகள் என்ற எண்ணற்ற நினைவுகளை எங்கள் அலம் இன்றும் எங்களுக்கு தந்து கொண்டிருக்கிறது.

* **மூர்த்தி**, வேட்டைக்காரனிருப்பு

ஏழு மாதங்கள் அலத்தில் தண்ணீர் இல்லாமல் காய்ந்து வரண்டு இருக்கும் காலங்களில் எங்கள் மனதுக்குள் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். எங்கள் அலத்தில் தண்ணீர் இல்லாவிட்டாலும் குறிப்பிட்ட இடங்களில் பொருக்கு மற்றும் உப்பு கிடைக்கும். நாங்கள் இந்த பொருக்குகளை உரங்களாக மா, தென்னை, புளி போன்ற மரங்களுக்கு இடுவதன் மூலம் அதிக மகசூல் கிடைக்கிறது. இதன் மூலம் குடும்ப வரவு செலவுகளை சிறிதளவு ஈடுகட்ட முடிகிறது. அதேபோல் ஆங்காங்கே கிடைக்கும் உப்பு கற்களை நாங்கள் எங்கள் வீட்டில் சமையலுக்கு பயன் படுத்திக் கொள்கிறோம். இங்கு எங்களால் அலத்தில் கிடைக்கும் உப்பு, உப்பளங்களில் இருந்து கிடைக்கும் உப்பை விட சற்று வித்தியாசமாகவே தென்படும்.

இதுவும் கிடைக்காத சமயங்களில் நாங்கள் சொந்தமாக காய்கறி சாகுபடி செய்து அருகில் உள்ள கிராம சந்தைகளில் விற்பனை செய்து எங்கள் வாழ்க்கையை நடத்துகிறோம். நாங்கள் பறவை மார்க்கெட் சந்தையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்பனை செய்து வருகிறோம்.

அலமானது வெகு நேரங்களில் ஒரு கிராமத்துக்கு உட்பட்டதாக இருக்கும் இருப்பினும் சில சமயங்களில் அலத்தின் நீளத்தை பொறுத்து அந்தந்த கிராமங்களுக்கு இடையே பகுதிகளை பங்கிட்டுக் கொள்வர். அலத்தை வாழ்வாதாரமாக கொண்டு இருக்கும் குடும்பங்கள் உள்நாட்டு மீனவர் சங்கம் என்ற அமைப்பில் தங்களை பதிவு செய்து கொள்வர். இது போல் இருக்கும் சங்கங்கள் ஒவ்வொரு கிராமங்களிலும் இருக்கும். எங்கள் வேட்டைக்காரனிருப்பு கிராமத்தில் சுமார் 150 குடும்பங்கள் வேட்டைக்காரனிருப்பு உள்நாட்டு மீனவர் சங்கம் என்ற அமைப்பில் உறுப்பினராக சேர்ந்துள்ளனர். அலத்தின் மூலம் கிடைக்கப்பெறும் வருமானத்தை ஏலம் விடுவதும் ஒரு வழக்கமாக இருந்து வருகிறது.

இவ்வாறு இருக்கும் அலத்தில் தமிழ்நாடு வனத்துறை சார்பில் ஆங்காங்கே திட்டுகள் அமைத்து சில மரக்கன்றுகள் வைக்கப்பட்டுள்ளது. இம்மரங்கள் பறவைகள் தங்குவதற்கு ஏதுவாக அமையப் பெற்றிருக்கிறது. கொக்கு, நாரை, மடையான், பருந்து, மீன்கொத்தி போன்ற பறவை இனங்கள் இந்த மரங்களில் தங்கி ஓய்வெடுத்து தங்களுக்கு தேவையான இறையை பிடித்துக் கொள்ள ஏதுவாக இருக்கிறது. எங்கள் ஊரில் உள்ள அலம் எங்கள் ஊருக்கு இறைவன் தந்த வளம்.



# கோடியக்கரைக்கு பறவைகள் மட்டுமல்ல மீனவர்களும் இடம்பெயருகிறார்கள்...

விஜய் *

திரு. சிவபாலன் வயது 27, 5 ஆம் வகுப்பு மட்டுமே படித்து மீன்பிடிப்பு தொழிலில் ஈடுபட்டு வருகிறார். இவர் ஒரு நடுத்தர மீனவ குடும்பத்தை சேர்ந்தவர், பருவநிலைக்கேற்ப இடப்பெயர்ச்சி செய்து வருகிறார். இவரது பகுதியில் 4-6 மாதம் வரை மீன்பிடிப்பு நன்றாக இருக்கும், அதற்கு பிறகு பிற பகுதிகளுக்கு சென்று அங்கேயே தங்கி மீன்பிடிப்பு தொழிலில் ஈடுபட்டுவருகிறார். இவர் தமது மீன்பிடி கட்டுமானத்திற்கு சுமார் 5 இலட்சம் வரை முதலீடு செய்து உள்ளார், ஒவ்வொரு முறை கடலுக்கு செல்லும் போதும், சுமார் ரூ. 6,000 முதல் ரூ. 7,000 வரை செலவு செய்கிறார். ஒரு முறை கடலுக்கு சென்றார் 3 நாட்கள் அங்கேயே தங்கி மீன்பிடித்து வருகிறார். ஒரு படகில் சுமார் சராசரியாக 4 நபர்கள் மட்டுமே மீன்பிடிக்க செல்கின்றனர். அவர்கள் வருமானம் நிலையற்றது, சரியான கணிக்க இயலாததாய் உள்ளது. சில நேரங்களில் ரூ. 1,000க்கும் குறைவாக மீன்பிடித்து வருகிறார்கள், சில நேரங்களில் சுமார் 1 இலட்சம் வரை மீன்பிடித்து வருகிறார்கள். வருகின்ற வருமானத்தை பகிர்ந்து கொள்ள முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. 4 நபர்கள் கடலுக்கு சென்றார்கள் எனில் ஒரு முறை கிடைக்கும் வருமானத்தை 7 பங்காக பிரித்துக் கொள்கின்றனர். வருமானத்தில் படகின் உரிமையாளருக்கு 2 பங்கும், வலையின் உரிமையாளருக்கு 1 பங்கும், படகில் பயணம் செய்த 4 நபர்களுக்கு, ஒரு நபருக்கு 1 பங்கு என்ற முறையில் மொத்தம் 7 பங்காக பிரிக்கப்படுகிறது. இடம் பெயர்ந்து பிற கிராமங்களில் சென்று தங்கி மீன்பிடிக்க சென்றுவரும் தரும். அவர்கள் சென்று தங்கும் வீட்டிற்கும், பொதுவாக கணக்கு வழக்குகளை பார்க்க என்ற வகையில் மொத்த வருமானத்தில் 10 சதவீதத்தை ஊருக்கு பொதுவாக தருகின்றனர்.

மீன்பிடிப்பு சிறப்பாக உள்ளது என்று சொல்லும் தருணம், இவர் மாதம் ஒன்றிற்கு சுமார் ரூ. 30,000 முதல் ரூ. 50,000 வரை வருமானம் ஈட்டுகிறார். சில நேரங்களில் மாதம் ஒன்றிற்கு ரூ. 10,000 மட்டுமே ஈட்டுகிறார், இந்த வகையில் அவரது வருமானம் நிலையற்றதாக, கணிக்க இயலாத வகையிலேயே உள்ளது. இந்த மாதம் கடந்த 3 முறை அவர் கடலுக்கு சென்று வந்தமையில் இவர் ரூ. 50,000 வருமானம் ஈட்டியுள்ளார். முதன் முறை ரூ. 5,000ம், 2 வது முறை ரூ. 10,000ம் முன்றாம் முறை ரூ. 35,000ம் வருமானம் ஈட்டியுள்ளார். இவருடைய பணப்புழக்கம் பற்றி கீழே உள்ள அட்டவணை விளக்குகிறது.



* **விஜய்**, கோடியக்கரை



| ஒரு முறை முதலீடு | |
|---|---|
| படகு | ரூ. 3,00,000 |
| வலை (4 வகையான வலைகள் உள்ளன) | ரூ. 2,00,000 |
| உபகரணங்கள் (சமையல் உபகரணங்கள், நங்கூரம் மற்றும் இதர) | ரூ. 10,000 |
| இன்ஜின் (2) | ரூ. 32,000 |
| ஜி.பி.எஸ் டிராக்கர் | ரூ. 12,000 |
| மொத்த செலவுகள் | ரூ. 5,54,000 |
| ஒரு மாதத்தில் 3 முறை சென்று வர ஆகும் செலவுகள் | |
| ஒரு முறை கடலுக்கு சென்று வர 50 லிட்டர் டீசல் தேவைப்படுகிறது, ரூ. 6,000 ★ 3 முறை | ரூ. 18,000 |
| உணவுக்கு 3 முறை சென்று வர | ரூ. 3,000 |
| மது மற்றும் சூதாட்டம் | ரூ. 1,000 |
| சிறுபண்டங்கள் | ரூ. 2,000 |
| சினிமா மற்றும் இதர கேளிக்கைகள் | ரூ. 1,000 |
| போக்குவரத்து | ரூ. 1,000 |
| வலைகளை மாற்ற | ரூ. 10,000 |
| இன்ஜின் பராமரிப்பு மற்றும் பெயிண்டிங் செலவு | ரூ. 10,000 |
| மொத்த செலவுகள் | ரூ. 28,000 |
| 3 முறை சென்று வந்ததால் கிடைத்த வருமானம் | ரூ. 50,000 |
| நிகர இலாபம் | ரூ. 22,000 |

(தகவல்: மீனவருடன் நேரடியாக தகவல் பெறப்பட்டது)

இவர் தனக்கு கிடைத்த இலாபம் ரூ. 22,000யை தனது பெற்றோருக்கு வீடு கட்ட உதவியாக அளித்துள்ளார்.

கோடியக்கரை வருடா வருடம் டிசம்பர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை இதுவே இங்குள்ள பெரும்பாலான மீனவர்களுக்கு மீன்பிடிப்பு களம். பிற பகுதிகளிலிருந்து அனைத்து மீனவர்களும் 4-5 மாதங்கள் கோடியக்கரைக்கு சென்று அங்கேயே தங்கி மீன்பிடிக்க சென்று வருகின்றனர். மார்ச் மாதம் இறுதியிலிருந்து 45 நாட்கள் மீன்பிடித்தடை காலமாக அரசு அறிவிக்கிறது, அச்சமயம், அனைத்து மீனவர்களும் தங்களது கிராமத்திற்கு திரும்பி சென்று விடுகின்றனர்.

கடந்த வருடம் ஏற்பட்ட கஜா புயலில், கோடியக்கரையில் மட்டும் சுமார் 21 மீனவர்கள் இறந்ததாக தகவல் உள்ளது. தங்களது வீடுகளையும், உடமைகளையும் இழந்த மீனவர்கள் பலர் உள்ளனர்.

மீனவ சமூகம் மிகவும் ஒற்றுமையான கட்டுண்ட சமூகமாகவே உள்ளது. அவர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும் தன்மையுடனே இருக்கின்றனர். குறிப்பாக, வலைகளை சரி செய்யும் போது, மீனவர்கள் ஒரு குழுவாக இணைந்து சரி செய்கின்றனர். இது இன்னரது என்று பேதம் பாராமல் அனைவரும் இணைந்து எதையும் எதிர்பார்க்காமல் செய்கின்றனர். இணைந்து செயல்படும் போது, தேவைப்படும் உணவு மற்றும் பிற செலவுகளை மட்டும் வலையின் உரிமையாளர் செய்கிறார்.

மீனவர்கள் கடுமையான உழைப்பாளிகளாக உள்ளனர். கடலுக்கு செல்லும் போது அன்று அதிகாலையிலேயே எழுந்து, உடனடியாக கடலுக்கு சென்று விடுகின்றனர். கடலில் இருக்கும் அவர்களுக்கு சரியான உணவு, உறக்கம் இருப்பதில்லை, 3 நாட்கள் கழித்து கரைக்கு வந்த பிறகே ஓய்வு எடுக்கின்றனர். ஓய்வு எடுக்கும் தருணம் சினிமா மற்றும் சீட்டு விளையாட்டிலேயே நேரத்தை செலவிடுகின்றனர். ஒவ்வொரு நாளும் சுமார் ரூ. 200 முதல் ரூ. 500 வரை செலவிடுகின்றனர். ஒவ்வொரு முறையும் புதிய சீட்டு கட்டுகள் வாங்குவதையும் வழக்கமாக கொண்டுள்ளனர்.

செலவுகளில் மீன்வலைகள் மாற்றுவதற்கே அதிகமாக செலவாகிறது, குறிப்பாக நண்டு பிடிக்கும் வலையின் விலை அதிகம். ஆனால் அதனை 10 முறை மட்டுமே பயன்படுத்த முடியும். குடிப்பழக்கமும் மீனவ சமூகத்தில் சகசமான அதிக செலவை தரும் பழக்கமாக உள்ளது. இவருடைய பலம், பலவீனம், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் என்று அலசும் போது, கீழ்காணும் அட்டவணைக் கிடைக்கிறது.

| பலம் | பலகீனம் |
|---|---|
| ☑ உடல் வலிமை<br>☑ பலமான சமூக கட்டமைப்பு<br>☑ 15 வருட அனுபவம்<br>☑ பலமான உடல் உழைப்பு<br>☑ ஒரு முறை முதலீடு | ☒ இடம்பெயரும் நிலை<br>☒ குறைந்த அளவிலான கல்வி<br>☒ திட்டமிட்டு செலவு செய்யாமை<br>☒ இந்திய கடல் எல்லையில் அதிக அளிவில் மீன் கிடைக்காமை |
| **வாய்ப்புகள்** | **அச்சுருத்தல்கள்** |
| ☝ படகுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வாய்ப்பு<br>☝ அதிக அளவில் தொழில் நுட்பங்களை பயன்படுத்தும் வாய்ப்பு<br>☝ அதிக முதலீடு, அதிக வருமானம்<br>☝ தொடர் மீன்பிடிப்பு தொழில் | ⚡ இயற்கை பேரிடர்கள்<br>⚡ அன்னிய நாட்டு எல்லை பிரச்சனை<br>⚡ வலைகள் அதிக அளவில் பாதிப்பது<br>⚡ அதிக அளவில் மீன்கிடைக்காமை<br>⚡ அதிக உயிர் இழப்புகள்<br>⚡ மீன்களின் ஏற்றம் இறக்கமான விற்பனை விலை |

(தகவல்- மீனவர்களுடன் நேரடியாக கலந்துரையாடியது)



திரு. ஆனந்த், 30 வயது விவசாயி, விவசாயத்தில் 15 வருடங்களுக்கு மேலாக தொழில்நுட்ப அனுபவ அறிவை பெற்றவர். அவரது தாத்தா காலத்திலிருந்து விவசாயம் செய்கிறார்கள். இவர் சுமார் 5 ஏக்கர் அளவில் நெல் அறுவடை செய்கிறார். ஊரில் உள்ள அனைத்து விவசாயிகளும், விவசாயம் செய்ய காட்டு பன்றிகள் இடைஞ்சலாய் உள்ளது என்று அஞ்சிக் கொண்டிருக்கும் வேளையில், 5 ஏக்கர் அளவில் வேலி அமைத்து பயிர் செய்து வருகிறார். இவர் மானவாரி விவசாயமே செய்து வருகிறார். இவரது நிலத்தில் பண்ணை குட்டையும் அமைக்க முடியவில்லை. சுமார் 12 அடியிலேயே உப்பு தண்ணீர் வந்து விடுகிறது, அது நெல் உழவிற்கு ஏற்றதாக இல்லை. எனவே இவர் மழை காலத்தில் பயிர் செய்து, பனி காலத்தில் அறுவடை செய்கிறார். இவர் கோ-15 என்கிற நெல் இரகத்தைப் பயிர் செய்கிறார், இந்த இரக நெல் 105 நாட்களில் குறைந்த தண்ணீரில் அறுவடை செய்ய இயலுகிறது.

# விவசாயத்துவம்...

விஜய் *

இவர் உயிர்ம இயற்கை உரங்களையே பயன்படுத்தி வருகிறார். தனது மாடுகளின் சாணத்தை உரமாக பயன்படுத்துகிறார். அதற்கும் மேல் தேவைப்படும் நேரத்தில் மற்ற விவசாயிகளிடமிருந்து உயிர் உரங்களை பெற்று பயன்படுத்துகிறார். இவர் தனது நெல் சாகுபடிக்கு அரசு பயிர் காப்பீடும் செய்து வருகிறார். ஒரு பருவத்தில் 5 ஏக்கரில் 107 மூடை அறுவடை செய்கிறார். நெல் சாகுபடி செய்தபின் ''எள்'' பயிர் செய்கிறார். எள் சாகுபடியில் ரூ. 5,000 முதலீடு செய்து ரூ. 10,000 வருமானம் ஈட்டுகிறார்.

| நெல் சாகுபடி வரவு செலவு | |
|---|---|
| குறிப்புகள் | தொகை |
| இரண்டு முறை உழுதல் | ரூ. 1,000 |
| வரப்பு (4 ★ ரூ. 250) | ரூ. 1,000 |
| சாகுபடி (விதைகள் மற்றும் கூலி ஆட்கள்) | ரூ. 5,000 |
| 2 முறை களையெடுப்பு (90 ★ ரூ. 250) | ரூ. 22,500 |
| அறுவடை இயந்திரம் வாடகை | ரூ. 5,000 |
| அறுவடைக்கு கூலி (4 ★ ரூ. 250) | ரூ. 1,000 |
| மாட்டுச்சாணம் | ரூ. 3,000 |
| பிற உரங்கள் (2 ★ ரூ. 250) | ரூ. 500 |
| தண்ணீர் குழாய் எரிபொருள் | ரூ. 500 |
| மொத்த முதலீடு | (தோராயமாக) ரூ. 40,000 |
| இலாபம் (107 ★ ரூ. 1,050) | ரூ. 1,12,350 |
| நிகர இலாபம் | ரூ. 72,350 |

(தகவல்: விவசாயிடம் நேரடியாக கலந்துரையாடல்)

* விஜய், கோடியக்கரை

# உப்பளம்

**சரவணன் ***

திரு. வீரசுந்தரம், தனது மனைவி மற்றும் மகளுடன் ஓட்டு வீட்டில் வசித்து வரும் ஓர் உப்பள உரிமையாளர். இவர் படிக்கவில்லை எனினும், தனது மகளை பட்டபடிப்பு படிக்க வைத்துள்ளார். இவர் தனது 12 வயது முதல் தனது தந்தையுடன் சேர்ந்து உப்பள தொழிலில் ஈடுபட்டுள்ளார். எனவே இத்தொழிலில் உள்ள நுட்பங்கள் அனைத்தும் இவருக்கு தெரியும். ஒவ்வொரு வருடமும் இலாபத்தையே ஈட்டி வருகிறார். கடந்த 2018 வருடம் கஜா புயலில் இவரது தொழில் வெகுவாக பாதிக்கப்பட்டது. கஜா புயலுக்கு பின் சுமார் 4 மாதங்கள் தொழில் செய்ய இயலாமல் மிகவும் கஷ்டப்பட்டுள்ளார். தனது உப்பளத்தின் கரைகளை சீர் செய்யவே 2 மாதம் ஆகியுள்ளது. தனது சேமிப்பு மற்றும் சிறிது வெளிக்கடன் பெற்று தனது தொழிலை மறுபடியும் ஆரம்பித்துள்ளார்.

மழை காலம் தவிற அனைத்து பருவங்களிலும் தொடர்ந்து உப்பள தொழில் செய்ய இயலும். எனவே இவர் தன்னுடன் 2 நபர்களை இணைத்து தொடர்ந்து பணி கொடுத்து வருகிறார். மழை காலத்திலும் களத்தை சுத்தம் செய்வது மறு சீரமைப்பது போன்ற பணிகளில் ஈடுபடுத்தி வருகிறார்.

உப்பள பணி மழைகாலத்திற்கு பிறகு குறிப்பாக ஜனவரி மாதம் துவங்கும். பெரிய மர உறுளைகளை கொண்டு முதலில் களத்தை சமன் செய்யும் பணி நடைபெறும். அதன் பிறகு கரைகள் அமைக்கும் பணி நடைபெறும். போர்வெல் அல்லது மோட்டாரின் உதவியுடன் கடல் நீர் களத்தில் 1 அல்லது 2 நாட்கள் நிரப்பப்படும். சூரிய ஒளியின் வெளிச்சத்தில் நீர் கொதி நிலை உயரும். அதன் பிறகு, வடிகாலின் வழிய அனைத்த களங்களிலும் தண்ணீர் நிரப்பப்படும். அதன் பிறகு உப்பு உற்பத்தி துவங்கும். சூரிய வெப்பத்தில் நீர் மூலக்கூறுகள் ஆவியாகி மேலே சென்றுவிடும் உப்புகள் களத்திலேயே தங்கிவிடும். அதன்பிறகு அவரிடம் பணி செய்யும் 2 நபர்களும் உப்பினை சேகரித்து சேமிப்பு கிடங்கில் வைப்பர். அதற்குரிய ஏஜன்டுகள் உப்பளத்திற்கே வந்து டன் கணக்கில் உப்பினை எடுத்து செல்வர். ஒரு டன்னுக்கு தேவையை பொறுத்து ரூ. 500 முதல் ரூ. 1,000 வரை எடுத்துச் செல்வர்.

டிசம்பரில் ஆரம்பிக்கும் உப்பள தொழில் அக்டோபர் மாதம் வரை தொடர்ந்து செயல்படும். மழைகாலம் ஆரம்பித்ததில் இருந்து டிசம்பர் மாதம் வரை உப்பள தொழில் பெரும்பாலும் நடைபெறுவதில்லை. அப்பொழுது இவர் மிகவும் கஷ்டப்படுகிறார். முதல் 6-7 மாதங்கள் சம்பாதித்த வருமானத்திலேயே அடுத்து வரும் 4-5 மாதங்களை கடக்கிறார். அவரது வரவு செலவுகள் கீழ்காணும் வகையில் உள்ளன.



* **சரவணன்**, கோடியக்காடு



| குறிப்புகள் | தொகை |
|---|---|
| களத்தை சமன் செய்தல் மற்றும் கரையை அமைத்தல் (4 ★ ரூ. 600) | ரூ. 2,400 |
| ஆண் தினக்கூலி (ரூ. 600 ★ 15) | ரூ. 4,500 |
| பெண் தினக்கூலி (ரூ. 300 ★ 15) | ரூ. 9,000 |
| மோட்டாருக்கான எரிபொருள் | ரூ. 300 |
| மொத்த முதலீடு | ரூ. 16,200 |
| முதல் மாதத்தில் | |
| ஒரு களம் - 2 நாட்களில் 50 கி (15 நாட்கள் ★ 50 கி) = 750 கி | |
| 750 கி ★ 50 களங்கள் = 37,500 கி (37.5 டன்) | |
| ஒரு டன்னுக்கு ரூ. 500 | ரூ. 18,750 |
| நிகர இலாபம் | ரூ. 2,550 |
| இரண்டாவது மாதத்திலிருந்து ஒரு களத்திற்கு 100 கி | ரூ. 37,500 |
| செலவு | ரூ. 13,800 |
| நிகர இலாபம் | ரூ. 23,700 |

உப்பள தொழில் என்பது பெரும்பாலும் இந்த பகுதியில் நவம்பர் மாதம் இறுதிவரை, குறைந்தபட்சம் 10 மாதம் தொடர்ந்து நடைபெறுகிறது. முதல் மாத செலவிற்கு பின் அதிக அளவில் செலவுகள் இல்லை. தொழிலாளர் கூலி மட்டுமே செலவாக உள்ளது.

காலை கதிரவன் உதிர்த்துக் கொண்டு இருக்கிறான். மார்கழி பனி அதிகாலையில் எழுந்து சாணம் தெளித்து புள்ளி வைத்த கோலம் தனது வீட்டு வாசல் நிரம்ப போட்டுக்கொண்டு இருந்தாள் வசுதா. அக்கா என்ன கோலம் போட்டியா? என்று கூறிக் கொண்டு வந்தாள் கண்மணி. அக்கா உன் கோலம் அழகாக இருக்கிறது என்றாள் உடனே வசுதா சிரித்தாள். ஏன் அக்கா சிரிக்கிறாய்? என்று கேட்க மார்கழி பனியில் எனக்கு ஐஸ் வைக்கிறாய் என்றாள் வசுதா. சமையல் செய்து விட்டு வேலைகளை முடித்து விட்டு அவசர அவசரமாக கடிகாரத்தை பார்த்தாள், காலை மணி 7. பிறகு ஓட்டமும் நடையுமாக பேருந்து நிலையத்தை நோக்கிச் சென்றாள் வசுதா. வசுதாவின் ஊர் திருவாரூரில் இருந்து 15 கிலோமீட்டர் தொலைவிலுள்ள புனவாசல் ஆகும். காலை 7.20 மணிக்கு பேருந்து வந்தது. திருவாரூர் தேர் திருவிழாவில் மக்கள் கூட்டம் இருப்பது போல் பேருந்தினுள் பயணிகள் நிரம்பி வழிந்து கொண்டு இருந்தனர். இந்த ஊருக்கு வரும் ஒரே பேருந்து இதுதான். காலையில் வேலைக்கு செல்லும் ஆண்கள் பெண்கள், கல்லூரிக்குச் செல்லும் மாணவ மாணவிகள், பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் மற்றும் வெளியூருக்கு செல்லும் பயணிகள் என அனைத்து தரப்பினரும் இந்த பேருந்தில் தான் பயணிக்க வேண்டும். படிக்கட்டில் பார்த்தால் 20 இளைஞர்கள் ஒற்றைக்காலில் தொங்கிக் கொண்டு செல்வார்கள். புனவாசல் வசுதாவும் அவளது தோழியும் பேருந்தில் ஏறினார்கள். 40 நிமிட பேருந்து பயணத்தில் நசுங்கி பிதுங்கி ஒருவழியாக திருவாரூர் நகரை வந்தடைந்தனர். பிறகு தாங்கள் வேலை பார்க்கும் கடையை அடைய சிறிது தூரம் நடக்க வேண்டியிருக்கும். கடையின் உள்ளே நுழைந்தவுடன் ஏன் இவ்வளவு தாமதம்? என்று கடை முதலாளி கேட்டார். அதை ஏன் கேட்கிறீர்கள் பேருந்தில் வருவதற்கு நேரம் தாமதம் ஆகிவிட்டது அதனால்தான் கடைக்கு சரியான நேரத்தில் வர முடியவில்லை என்ற வாதத்தை வசுதா முன்வைத்தாள். கடையில் உள்ள அனைத்து வேலைகளையும் அவள் ஒருத்தி தான் செய்யும் வல்லமை கொண்டவள். மாலை நேரம் நெருங்க வேக வேகமாக அனைத்து வேலைகளையும் முடித்துவிட்டு கடை முதலாளியிடம் சொல்லி விட்டு வீட்டிற்கு கிளம்புவாள். காலை வேலை போலவே மாலையிலும் தன் தோழியை பேருந்து நிலையத்தில் பார்த்தவுடன் இருவரும் அன்றைய பொழுது எப்படி இருந்தது பற்றி பேசிக்கொண்டு இருப்பர். வசுதா வருகின்ற அனைத்து பேருந்தையும் பார்த்தவாறு இருந்தாள் மற்ற ஊர்களுக்கு இரண்டு அல்லது மூன்று பேருந்துகள் சென்று விட்டது ஆனால் கோட்டூர் ஊருக்கு செல்லும் பேருந்து மட்டும் கால அட்டவணையில் இருக்கும் நேரத்திற்கு வரவில்லை. திருவாரூர் பேருந்து நிலையத்தில் கோட்டூர் பேருந்திற்காக மக்கள் கூட்டம் அலைமோதிக் கொண்டு இருந்தது. சிறிது நேரம் கழித்து ஓர் பேருந்து கோட்டூர் பெயர் பலகை கொண்டு பேருந்து நிலையத்தின் உள்ளே நுழைந்தது. அதைக் கண்டதும் மக்கள் அனைவரும் நிம்மதி பெருமூச்சு விட்டு சிரித்துக் கொண்டும் மோதிக் கொண்டும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியோர் என அனைத்து வயதினரும் பேருந்தில் உட்கார இருக்கை வேண்டுமென முந்திச் சென்றனர். ஆனால் பேருந்து நிலையத்திற்கு உள்ளே நுழைந்த பேருந்து பணிமனைக்கு சென்றது. சிரித்துக் கொண்டிருந்த மக்கள் முகத்தில் திடீர் சோகம் வந்து ஏறியது. இதைத்தொடர்ந்து அனைத்து பயணிகளும் பணிமனை வாசலில் காத்துக்கொண்டு இருந்தனர். காரணம் பேருந்தின் சக்கரங்களில் பழுது ஏற்பட்டு விட்டது. பிறகு ஒரு மணி நேரம் கழித்து தயாராகி பேருந்து பயன்பாட்டிற்கு வந்தது. இந்த முறை அதிக நேரம் காத்திருந்ததால் சற்று மூர்க்கத்தனமாக பயணிகள் நடந்து கொண்டனர். எப்படியோ இறுதியாக அனைவருக்கும் பேருந்தில் இடம் கிடைத்தது. பலர் இருக்கைகளிலும், சிலர் நின்று கொண்டும், இன்னும் மிகச் சிலர் பேருந்தின் படிக்கட்டில் தொங்கிக் கொண்டும் தங்கள் பயணத்தை தொடங்கினர். வசுதாவும் அவளது தோழியும் அவர்களது ஊரான புனவாசல் வந்ததும் இருவரும் இறங்கினர். ஊர் மக்கள் அனைவரும் தங்களது இரவு உணவை முடித்துக்கொண்டு உறங்கச் சென்று விட்டனர், ஒட்டுமொத்த புனவாசலும் அமைதியாக இருந்தது. அவள் யார் காதுக்கும்

* **ராதிகா**, பி.ஆர். புரம்




# பேருந்து வழித்தட எண் 353 திருவாரூர் – கோட்டூர்

ராதிகா *

தனது கொலுசு சத்தம் கேட்கா வண்ணம் மெல்ல நடந்து தனது வீட்டை அடைந்தாள். வசுதாவின் தாயார் தன் மகளின் வருகையை எதிர்பார்த்த வண்ணம் வீட்டின் வாசலில் காத்துக்கொண்டு இருந்தார். ஏன் இவ்வளவு தாமதம்? என்று தாயார் கேட்க வசுதா அன்று நடந்த நிகழ்வுகளை தொகுத்து சொன்னாள். அதை கேட்டு அறிந்த தாயார் இது என்றும் நமக்கு புதிது இல்லையே என்று வினவினார்.

திருவாரூரிலிருந்து கோட்டூரை அடைவதற்கு பேருந்தில் சுமார் ஒரு மணி நேரம் ஆகும். இதில் பல பேருந்து பயணிகள் கோட்டூர் அடைவதற்குள் தங்கள் ஊர் பேருந்து நிறுத்தத்தில் ஆங்காங்கே இறங்கி கொள்வர். இப்பொழுது நிலவும் நவீனகால மாற்றத்திலும் இந்த கோட்டூர் ஊர் மக்கள் மட்டும் ஒரே பேருந்தை நம்பி இருக்கும் அவல நிலை இருக்கிறது. இந்த ஊருக்கு காலை மாலை என இரு வேளைகளில் மட்டுமே பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அந்த ஊர் மக்கள் வெளியூர் செல்வதற்கு காலையிலோ அல்லது மாலையிலோ செல்ல வேண்டும், இதற்கு இடைப்பட்ட நேரங்களில் செல்ல முடியாது. திருவாரூர் நகரில் இருந்து நிறைய பேருந்துகள் பேருந்து நிலையத்தில் வந்த வண்ணமும் போன வண்ணமும் இருக்கும் அவற்றிலெல்லாம் இவ்வளவு மக்கள் கூட்டம் அலை மோதாது. ஆனால் கோட்டூர் பேருந்தில் மட்டும் எப்போதும் மக்கள் கூட்டம் நிரம்பி வழியும் நிலை ஏற்பட்டுள்ளது. முக்கிய பண்டிகை தினங்களிலும் திருவிழா நாட்களிலும் மக்கள் கூட்டம் இந்தப் பேருந்தில் இன்னும் சற்று கூடவே இருக்கும். பேருந்து வரும் வழியில் பழுதாக நேர்ந்தால் பயணிகள் அனைவரும் சுமார் 10 கிலோ மீட்டர் நடந்து சென்று கமலாபுரத்தில் தான் திருவாரூரை அடைவதற்கான பேருந்தை பிடிக்க முடியும். இதனால் கோட்டூர் ஊர் மக்கள் இந்தப் பேருந்து பயணங்களால் மிகவும் மனவேதனை அடைந்து வருகிறார்கள் இதற்கு தீர்வு தான் என்னவோ என்று தெரியவில்லை....

பேருந்து வழித்தடம்: திருவாரூர் - கோட்டூர்

பேருந்து வழித்தட எண்: 353

நிறுத்தம்: புனவாசல்

என் பெயர் ஈஸ்வரி. எனக்கு சொந்த ஊர் நாகபட்டினம் மாவட்டம் வேட்டைக்காரனிருப்பு. தமிழகமெங்கும் எல்லா ஊர்களிலும் பொங்கல் திருவிழா தை மாதம் நம் தமிழர்களால் வெகுவிமர்சையாக கொண்டாடப்படும் என்று எல்லோரும் அறிந்ததே ஆனால் எங்கள் ஊரில் மிகப் பிரம்மாண்டமாக தோன்றும் வண்ணம் நடைபெறும். எங்கள் ஊரில் உள்ள பெண்கள் மத்தியில் தைத்திருநாள் வெகு விமர்சையாக கொண்டாடப்படும்.

பொங்கல் திருவிழா ஆரம்பிப்பதற்கு 10 நாட்களுக்கு முன்பாகவே எங்கள் ஊரில் வீட்டை சுத்தம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். பெண்களோடு ஆண்களும் தங்கள் பங்கிற்கு வீட்டை அழகுபடுத்துவதிலும் வர்ணம் பூசுவதிலும் ஈடுபடுத்திக் கொள்வர். பெரும்பாலும் எங்கள் முன்னோர்கள் குடிசை வீடுகளில் தான் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வாழ்ந்த வீடுகளில் சுவர்கள் மற்றும் தரையை பூசுவதற்கு மண்ணாரி என்ற ஊரிலிருந்து மண் வாங்கி வந்து பூசுவார்கள்.



* **ரவிதா**, வேட்டைக்காரனிருப்பு

தமிழகத்திலுள்ள எல்லா ஊர்களை போலவே எங்கள் ஊரிலும் பொங்கல் திருநாளை போகிப் பண்டிகை, பொங்கல் திருநாள், மாட்டுப் பொங்கல், கன்னிப் பொங்கல் என நான்கு நாட்கள் வெகு விமர்சையாக கொண்டாடுவோம்.

பொங்கல் திருவிழாவின் முதல் நாளான போகிப் பண்டிகையின் போது வீட்டில் உள்ள பழைய தேவையற்ற பொருட்களை வெளியே எடுத்து வந்து சுத்தம் செய்தும் தீ வைத்து எரித்தும் கொண்டாடுவோம். தைத் திருநாளில் இரண்டாவது நாளான பொங்கல் திருநாளில் வீட்டில் உள்ள அனைவரும் அதிகாலையில் எழுந்து எண்ணெய் குளியல் போட்டு அன்று புத்தாடைகள் அணிந்தும் மண்பானையில் பொங்கல் வைத்து சூரியன் உதிக்கும் திசையில் பொங்கல் பானையை வைத்து சூரிய பகவானை வணங்கும் விதமாக பொங்கல் பொங்கும் நொடியை அனைவரும் எதிர்பார்த்து மகிழ்ச்சியாக காத்துக் கொண்டிருப்போம். பொங்கல் பொங்கும் தருணத்தில் அனைத்து பெண்களும் குலவை இட்டு பொங்கல் பானை அடுப்பிலிருந்து கீழே இறக்கி வைத்து கடவுளுக்கு படையலிட்டு அதன்பின் அனைவரும் சர்க்கரை பொங்கலை உண்டு மகிழ்வோம்.

அன்றைய நாள் முடிவடைந்த பிறகு மூன்றாம் நாளான மாட்டுப் பொங்கல் அன்று எங்களுடைய வீட்டில் மாட்டு சாணம் வைத்து மொழுகிய தரையில் பச்சரிசி மாவை வைத்து வீட்டின் முன்புறமும் பின்புறமும் கோலமிடுவோம். பின் எங்கள் வாழ்வாதாரமான விவசாயத்திற்கு உறுதுணையாக நிற்கும் எங்கள் ஆடு மாடுகளை குளிப்பாட்டி அதனுடைய கொம்புகளில் காவி வர்ணம் பூசுவோம். மாலை 4 மணிக்கு மேல் நெட்டி மாலை அணிவித்து ஆடு மாடுகளுக்கு பொங்கல் வைத்து படையில் இடும்போது

பொதுவான இடங்களில் மண் மேடை அமைத்து மணமேடையில் பிள்ளையார் செய்து அதன் தலைப்பகுதியில் அருகம்புல் சிறிதளவு வைத்து அதன் பக்கத்தில் நெற்கதிர் படையில் இடப்பட்டு கடவுளை வணங்குவோம். அன்றைய தினம் பச்சரிசியில் பொங்கல் வைத்து ஆடு மாடுகளுக்கு படையலிட்டு கொண்டாடுவோம்.

அதனைத்தொடர்ந்து தமிழர் திருநாளான பொங்கல் திருவிழாவில் நான்காவது நாளில் கன்னிப் பொங்கல் வெகு விமர்சையாக எங்கள் பகுதியில் கொண்டாடப்படும். கன்னிப் பொங்கல் அன்று எங்கள் ஊரில் உள்ள அனைத்து இளைஞர் இளைஞிகளும் அதிகாலை 5 மணியளவில் எழுந்து அத்தை மகன் மாமன் மகள் மேலேயும், மாமன் மகன் அத்தை மகள் மேலேயும் மஞ்சள் தண்ணீர் ஊற்றி விளையாடுவார்கள். மேலும் வெவ்வேறு விதமான வண்ணப் பொடிகளை ஒருவர் மீது ஒருவர் தூவி விளையாடுவார்கள். இதனைத் தொடர்ந்து காலை 8 மணி அளவில் வீரன் கோவில் விளையாட்டு மைதானத்தில் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை விளையாட்டு போட்டியில் கலந்து கொள்வார்கள். சிறுவர்களுக்கு ரொட்டிக் கடித்தல், கனியும் கரண்டியும், சோடா பாட்டிலில் தண்ணீர் நிரப்புதல், ஊசியில் நூல் கோர்த்தல், உருளைக்கிழங்கு சேகரித்தல், பலூன் உடைத்தல், சாக்கு ஓட்டம், மூன்று கால் ஓட்டம், ஸ்பிரிங் கயிறு தாண்டுதல் ஆகிய விளையாட்டுகள் நடத்தப்படும். இளைஞர்களுக்கு உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல், இசை நாற்காலி,



லக்கி கார்னர், வழுக்கு மரம் ஏறுதல், உரியடித்தல், பொண்ணுக்கு பொட்டு வைத்தல், சிரிப்பு போட்டி போன்ற விளையாட்டுகள் நடத்தப்படும். எங்கள் குழந்தைகளை ஆடல் பாடல் நிகழ்ச்சி களில் கலந்துகொண்டு பரிசு பெறும்படி அவர்களை ஊக்குவிப்போம்.

இதேபோல் எங்கள் குழந்தைகள் விளையாடி வெற்றி பெற்ற போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பிடித்தவர்களுக்கு பரிசளிப்போம். இது அவர்களை தங்கள் வாழ்வில் எதிர்நோக்கி வரும் சவால்களை எதிர்கொள்ளும் வண்ணமும் ஊக்குவிக்கும் பொருட்டும் நடத்துவோம். இதுமட்டுமல்லாமல் எங்கள் ஊரில் உள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளியில் நடைபெற்ற போட்டிகளில் முதல் மூன்று இடம் படைத்த மாணவ மாணவிகளுக்கும் பரிசளித்து ஊக்குவிப்போம்.

இதோடு இல்லாமல் காலையிலிருந்து மாலை வரை சிறியவர்களும்

# கன்னிப் பொங்கலும் கொப்புராட்டியும்...



இளைஞர்களும் விளையாட்டுகளில் பங்குகொண்டு இருக்கும்போதே ஆறு மணியளவில் கன்னிப்பெண்களுக்கு ஒரு திருவிழாவே நடக்கும் அதற்கு நாங்கள் எங்கள் ஊரில் கொப்புராட்டி விடுதல் என்று கூறுவோம். அதை நாங்கள் எவ்வாறு கொண்டாடுவோம் என்று கூறுகிறேன் கேளுங்கள். சுமார் ஐந்து நாட்களுக்கு முன்னர் எங்கள் ஊரில் உள்ள கன்னிப்பெண்கள் வீட்டிற்கு சென்று, கன்னி பொங்கலுக்கு நம் ஊர் சார்பில் கொப்புராட்டி விட இருக்கிறோம் என அவர்களுக்கு அழைப்பு விடுப்போம். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கன்னிப்பெண்களின் யார் தலைவியாக வேண்டும் என்று இரண்டு நாட்களுக்கு முன்னதாக தேர்ந்தெடுப்போம். அவ்வாறு தேர்ந்தெடுத்த கன்னி பெண்ணிடம் கன்னி பொங்கலுக்கு தேவையான அனைத்து பொறுப்புகளையும் ஒப்படைத்து விடுவோம். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கன்னிப் பெண்ணும் தன்னுடைய கடமையை சரியாக செய்துவிடுவார்.

அடுத்தபடியாக மாட்டுச் சாணத்தின் பிள்ளையார் பிடித்து அதை காயவைத்து தனியாக எடுத்து வைத்து இருப்பார்கள். பிறகு கன்னிப் பொங்கல் கொண்டாடுவதற்காக எல்லா வீட்டிலுள்ள கன்னிப் பெண்களையும் பொங்கல் வைப்பதற்கு தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டு வர செய்து அனைவருக்கும் பொதுவாக ஒரு பொங்கலை வைப்போம். நாங்கள் எங்கள் ஊரில் கொப்புராட்டி விடுவதற்கு பாரம்பரிய சேலைகளை மட்டுமே அணிந்து வந்து கொண்டாடுவோம். ஏனெனில் இந்தக் கன்னிப் பொங்கல் ஆனது கன்னிப் பெண்களுக்கு மட்டுமே உரிய சடங்காகும் எனவே, இதில் கன்னிப்பெண்கள் கட்டாயம் புடவையை அணிந்து கொண்டு எங்கள் ஊர் மாரியம்மன் கோவில் வளாகத்திற்கு வரவேண்டும் என்பது தான் ஐதீகம்.

இவ்வாறு அழைப்பு விடுத்த அனைத்து கன்னிப் பெண்களும் வட்டமாக நின்று கும்மி பாடுவார்கள். கும்மி பாடிய பிறகு தீபாராதனை காட்டுவார்கள், இதனைத்தொடர்ந்து எல்லாம் கன்னிப்பெண்களும் சேர்ந்து சாமிக்கு படையல் போட்ட பொங்கலையும், பிடித்து வைத்த பிள்ளையாரையும் எடுத்துக் கொண்டு மாரியம்மன் கோவில் அருகில் உள்ள குளத்தில் கரைத்து விடுவார்கள். அவ்வாறு கரைத்த பின்பு கன்னிப்பெண்கள் யாரும் திரும்பி பார்க்காமல் வந்துவிட வேண்டும் என்று காலம் காலமாக கடைபிடித்து வரும் ஒரு வழக்கம் ஆகும். ஏனெனில் கன்னி பொங்கலில் பங்கு கொண்ட அனைத்து கன்னிப் பெண்களுக்கும் நல்ல வாழ்க்கை கிடைக்க வேண்டும் என்று கடவுளிடம் வேண்டிக் கொண்டு கரைப்பதாக நம்பப்படுகிறது. இதனைத் தொடர்ந்து வயதான மூதாட்டிகள் கும்மி அடிக்க மாரியம்மன் வளாகம் முழுவதும் திருவிழா கோலம் பூண்டு களை கட்டி ஆடலும் பாடலுமாக வெகு விமர்சியாக இருக்கும். இதன்பிறகு கன்னிப் பொங்கலுக்கு வந்த அனைவருக்குமே கன்னிப் பெண்கள் செய்த பொங்கலை கொடுத்து அனுப்பி விடுவார்கள். இதுவே எங்கள் ஊரில் கன்னிப் பெண்கள் மட்டும் கொண்டாடும் கன்னிப் பொங்கல் ஆகும்.



## தானம் அறக்கட்டளை

தானம் அறக்கட்டளை வறுமையை அகற்ற மக்கள் இயக்கங்களை உருவாக்கி, அவற்றை ஜனநாயக அடிப்படையில் செயல்பட வைக்கும் ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம் 1997 அக்டோபர் 2 முதல் செயலாற்றி வருகிறது. ஆர்வமுள்ள படித்த இளைஞர்களை ஏழை மக்களின் வளர்ச்சித் திட்டங்களில் பணியாற்றச் செய்வதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படச் செய்வதே தானம் அறக்கட்டளையின் முக்கிய நோக்கமாகும்.

மக்கள் நிறுவனங்களை உருவாக்கி அவற்றின் மூலம் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் மூலம் ஏழ்மையை அகற்றும் நோக்கில் களஞ்சியம், வயலகம், மானாவாரி விவசாயம், தகவலகம், கடற்புற வாழ்வாதாரம், பஞ்சாயத்து போன்ற அமைப்புகளின் வாயிலாக பல்வேறு வளர்ச்சிப் பணிகளை செய்துவருகிறது. கடந்த பதினெட்டு ஆண்டுகளுக்கும் மேலாக அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுடன் இணைந்து 14 மாநிலங்களில் 17 இலட்சம் மக்களுடன் மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

## DHAN Foundation

DHAN Foundation is a development Organization working towards significant changes in the lives of the poor through innovative themes. It has been promoted with the objective of bringing highly motivated and educated young women and men to the development sector to work with the poor at grassroots. DHAN Foundation has come out with two scalable models Kalanjiam model of Micro Finance and Vayalagam model of Tank based watershed development. It is working on developing models on other programmes viz Tata Dhan Academy, Rainfed, Panchayat, ICT for poor. The new themes on Climate Change and Adaptation, Migration and Development, Youth and Development are on piloting in evolving models. The centres of DHAN Foundation play a vital role in integrating different programmes and themes across, in nurturing and processing the culture of collegiality, mutuality and solidarity.


மேலும் தொடர்புக்கு

**தானம் அறக்கட்டளை**
1ஏ, வைத்தியநாதபுரம் கிழக்கு, கென்னட் குறுக்குத் தெரு
மதுரை 625 016. தமிழ்நாடு
தொலைபேசி: +91 452 2302500, தொலைநகல்: +91 452 2602247
மின்னஞ்சல்: dhanfoundation@dhan.org, இணையதளம்: www.dhan.org